மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.02/2019
அ.வ.எண்.66/2019

1. வரதராஜன் (எ) வரதராஜு (இறந்தவர்)*
2. குமுதவள்ளி*
3. சேதுவராயன்*
4. தமிழ்செல்வன்*
5. கோமதிசெல்வி* ... மனுதாரர்கள்/வாதிகள்
*(Amended as per order in I.A.No.6/2021 dt.18.03.2021)

/எதிராக/

1. மாரியம்மாள்
2. ராமலிங்கம்
3. பெரியண்ணன்
4. அறிவழகன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 01.04.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு 2 முதல் 5 வரையிலான மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 1ம் மனுதாரர் இறந்தவராகவும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராகவும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பு எழுத்துமூலமான வாதுரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) வாதிகள்/மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து

ஆதியில் ஒரு மாரிமுத்து கவுண்டருக்கு பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்டதாகும். மேற்படி மாரிமுத்து கவுண்டரும், அவரது வாரிசுகளும் சேர்ந்து கடந்த 28.11.1990ம் தேதியில் தாவா சொத்தை 1ம் மனுதாரருக்கு விற்றுவிட்டனர். மேற்படி கிரய தேதியிலிருந்து 1ம் மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் (2 முதல் 5 வரையிலான மனுதாரர்கள்) தாவா சொத்தின் பூரண உரிமையாளர்களாக தாவா சொத்தில் விவசாயம் செய்து, அதன் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்கள்.

(ii) எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களின் முன்விற்பனையாளர்கள் மாரிமுத்துவின் மகன்களின் வாரிசுகள் ஆவார்கள். தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதாரர்கள் 3ம் நபர்கள் ஆவர். தாவா சொத்தின் வளர்ச்சியை கண்டு பொறாமை கொண்டு, தாவா சொத்தை குறைந்த விலைக்கு தங்களுக்கு விற்குமாறு எதிர்மனுதாரர்கள் கூறியதை 1ம் மனுதாரர் மறுக்கவே, மேற்படி மாரிமுத்துவின் 2வது மனைவியின் வாரிசுகளை தூண்டிவிட்டு, தவறான சங்கதிகளுடன் அ.வ.எண்.9/2013 என்ற பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்து, 1ம் மனுதாரரையும், அவரது தாயாரையும் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளனர். மேற்படி வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி வழக்கில் தங்களுக்கு சாதகமான சூழ்நிலை இல்லை என்பதை தெரிந்து கொண்ட எதிர்மனுதாரர்கள் தாவா சொத்திலுள்ள மனுதாரர்களின் சுவாதீன அனுபவத்திற்கு பல்வேறு வகையில் இடையூறு செய்து வருகின்றனர்.

(iii) இந்நிலையில் கடந்த 03.07.2019ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்ததால், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:–

(இப்பதிலுரை குறிப்பாணையின்பேரில் எதிர்மனுதாரர்களால் அவர்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் குறிப்பிடும் 06.06.1964ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஒரு தரப்பினரல்ல. 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்துகள் குறித்து அ.வ.எண்.9/2013 என்ற வழக்கை 1ம் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது. தாவா சொத்தை பாகப்பிரிவினை செய்து கொள்வதற்கு மாரிமுத்து கவுண்டருக்கோ அவரது ஆண்மக்களுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது. ஏனெனில் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் பிதுரார்ஜித சொத்தாகும். 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியாமலும், அவரது சம்மதமுமின்றி மாரிமுத்து கவுண்டரும், அவரது ஆண்மக்களும் செய்து கொண்ட 06.06.1964ம் தேதிய பாகப்பத்திரமும், அதனை துணையாக கொண்டு 1ம் மனுதாரர் கிரயம் பெற்ற 28.11.1990ம் தேதிய கிரய ஆவணமும் 1ம் எதிர்மனுதாரரை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது.

(ii) 4ம் எதிர்மனுதாரர் அறிவழகன் என்பவர் அங்கமுத்துவின் மகனே கிடையாது. மேற்படி அங்கமுத்து, நாராயணசாமி, மாரிமுத்து ஆகியோரிடம் கிரயம் பெற்றதாக குறிப்பிடும் 1ம் மனுதாரரின் கிரய ஆவணம் 1ம் எதிர்மனுதாரரை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. தாவா சொத்தின் சுவாதீனத்தில் 1ம் மனுதாரர் இருப்பதாக கூறுவதும், தாவா சொத்திற்கான அனைத்து வருவாய் ஆவணங்களும் 1ம் மனுதாரரின் பெயரில் உள்ளதாக கூறுவதும் பொய்யாகும். 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை பொறுத்து கூட்டு பங்குதாரர் ஆவார். தாவா சொத்தில் 1ம் மனுதாரர் வீடுகட்டி தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாக குறிப்பிடுவதும், தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் 1ம் மனுதாரர் தான் என்பதும், தாவா சொத்தினை பொறுத்து கந்தாயம் உட்பட இதர வரியினங்களை செலுத்தி வருவதாக கூறுவதும், மனுதாரர்களை தவிர தாவா சொத்தில் வேறு எவருக்கும் எவ்வித உரிமையோ, உரிமைமூலமோ, பிற பாத்தியதைகளோ இல்லை என்பதும், பொய்யாகும்.

(iii) 1ம் எதிர்மனுதாரரின் பங்குரிமையை ஏமாற்றவே மனுதாரர்கள் பொய் ஆவணத்தை கொண்டு உரிமை கொண்டாடி வருகிறார்கள். 1, 2 பிரதிவாதிகள் தாயும், மகனும் ஆவர். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தை பொறுத்து 3ம் மனிதர்கள் என்பதும்,

கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு தாவா சொத்தை தங்களுக்கு குறைந்த விலைக்கு விற்குமாறு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் கோரினர் என்பதும், மற்ற எதிர்மனுதாரர்களின் தூண்டுதல்பேரில் 1ம் எதிர்மனுதாரர் அ.வ.எண்.9/2013 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதில் வெற்றி பெற இயலாது என்பதால் தாவா சொத்தில் வீண் தொந்தரவுகள் தருகிறார் என்பதும், கடந்த 03.07.2019ம் தேதியன்று 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அவர்களது ஆட்களுடன் 1ம் மனுதாரருக்கு தொந்தரவு செய்ததாக குறிப்பிடுவதும் பொய்யாகும். அ.வ.எண்.9/2013ல் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யாமல் 1ம் மனுதாரர் காலவிரயம் செய்துவந்தார். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் உண்மையான சுவாதீனம் கொண்டு கூரை சாலைஅமைத்து குடியிருந்து வருகிறார்கள்.

(iv) 1ம் எதிர்மனுதாரரை தாவா சொத்திலிருந்து அகற்ற மனுதாரர்களும், மற்றவர்களும் அடித்து துரத்த முற்பட்டு 1ம் எதிர்மனுதாரர் நங்கவள்ளி காவல்நிலையத்தில் 1ம் மனுதாரர் பெயரில் புகார் கொடுத்துள்ளார். தாவா சொத்தை 6 ஆண்டுகளுக்கு முன்பே குறைந்த விலைக்கு கேட்டிருந்தால் மனுதாரர்கள் அப்போதே வழக்கிட்டிருப்பர். கடந்த 6 ஆண்டுகள் கால எல்லையை கடந்து ஏன் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். மனுதாரர்களால் குறிப்பிடப்படும் கிரய ஆவணமும், அதிலுள்ள எந்த ஷரத்தும், சொத்து விபரமும் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எவ்வித பலனையும் பெற இயலாது. வழக்குமூலம் பொய்யானது. சொத்து மதிப்பு, நீதிமன்ற கட்டண விபரம் தவறாகும். தாவா சொத்தின் உண்மையான பங்குரிமையராகிய 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பரிகாரமோ மற்றும் இதர பரிகாரமோ பெற்றிட இயலாது. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.18 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தானது ஒரு மாரிமுத்துகவுண்டருக்கு பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தில் கடந்த 28.11.1990ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் மேற்படி மாரிமுத்து மற்றும் அவரது வாரிசுகளிடமிருந்து கிரயம் பெற்று, அதன் சுவாதீன அனுபவத்திலிருந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர்கள் மேற்படி மாரிமுத்துவின் மகன்கள் வழி வாரிசுகள் என்றும், தாவா சொத்தை 1ம் மனுதாரர் குறைந்த விலைக்கு எதிர்மனுதாரர்களுக்கு விற்க மறுத்ததால், விரோதம் கொண்டு, மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து தவறான சங்கதிகளுடன் அ.வ.எண்.9/2013 என்ற பாகப்பிரிவினை வழக்கை எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி வழக்கில் சாதகமான சூழ்நிலை இல்லாததால் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுதாரர்களின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்து தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்து வருகின்றனர் என்றும், எனவே மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) அதே சமயத்தில் 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் பிதுரார்ஜித சொத்து என்றும், 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை பொறுத்து கூட்டு பங்குதாரர் என்றும், கடந்த 06.06.1964ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஒரு தரப்பினரல்ல என்றும், தாவா சொத்தை பாகப்பிரிவினை செய்து கொள்வதற்கு மாரிமுத்து கவுண்டருக்கோ, அவரது ஆண்மக்களுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது என்றும், 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்துகள் குறித்து அ.வ.எண்.9/2013 என்ற வழக்கை 1ம் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது என்றும், 1ம் மனுதாரரால் பெறப்பட்ட கிரயம் எதிர்மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றும், எனவே இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்தில் வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என வாதிகள்/மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளத தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் பூர்வீக சொத்து என்றும், 1ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்காமல் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளதாகவும், அதனால் 1ம் மனுதாரரால் பெறப்பட்ட 1ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்திலுள்ள உரிமையை கட்டுப்படுத்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது, தாவா சொத்திலுள்ள தனது சட்டப்படியான சுவாதீன அனுபவத்தை மனுதாரர்கள் நிரூபித்துள்ளனரா? என்பதும், மனுதாரர்களின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தனரா? என்பதுமே ஆகும்.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1

முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டு, வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.04.16 17:01:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 06.06.1964 பாககரார் பத்திரம் | பதிவுநகல் |
| ம.சா.ஆ.2 | 28.11.1990 கிரயப்பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.3 | கந்தாய ரசீதுகள் (9 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.4 | வீட்டுவரி ரசீதுகள் (4 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.5 | மின்கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.6 | அ.வ.எண்.9/2013 ன் திருத்தப்பட்ட வழக்குரை | நகல் |
| ம.சா.ஆ.7 | 17.08.2015 அ.வ.எண்.9/2013 ன் பதிலுரை | நகல் |
| ம.சா.ஆ.8 | 03.07.2019 அ.வ.எண்.9/2013 ன் கூடுதல் பதிலுரை | நகல் |
| ம.சா.ஆ.9 | 27.12.2005 கணிணி பட்டா எண்.1018 | நகல் |
| ம.சா.ஆ.10 | புகைப்படங்கள் (5 எண்ணிக்கை), குறுந்தகடு (1) | அசல் |
| ம.சா.ஆ.11 | 05.07.2022 முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.12 | 05.07.2022 முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.13 | 23.08.2023 புகைப்படங்கள்(3), ரசீது | அசல் |
| ம.சா.ஆ.14 | 23.08.2023 புகைப்படங்கள்(6), ரசீது | அசல் |
| ம.சா.ஆ.15 | குறுந்தகடு(1) | அசல் |
| ம.சா.ஆ.16 | 20.02.2021 விவசாய பயிர் கடன் தள்ளுபடி சான்றிதழ் | அசல் |
| ம.சா.ஆ.17 | 31.07.2020 கிசான் கிரெடிட் கார்டு | அசல் |
| ம.சா.ஆ.18 | கிசான் கிரெடிட் கார்டு பாஸ்புத்தகம் | அசல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | புகார் மனு மற்றும் | நகல் |
| | அஞ்சலக ரசீதுகள் | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | புகைப்படங்கள் (4), குறுந்தகடு (1) | அசல் |
| எ.ம.சா.ஆ.3 | அ.வ.எண்.9/2013 ன் திருத்தப்பட்ட வழக்குரை | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.4 | 17.08.2015 அ.வ.எண்.9/2013 ன் பதிலுரை | சான்றிட்டநகல் |

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.04.16 17:01:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.